இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இளம் வீரருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர் அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

தெரு விளக்குகள்

***2782—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 38 முதல் 43 வரை மற்றும் 47 ஆகிய வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளை மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, ஆர்.கே. நகர் தொகுதியில் 69 எண்ணிக்கையில் துருப்பிடித்த பழைய தெரு விளக்கு மின்கம்பங்களை மாற்றி, புதிய 7 மீட்டர் உயர மின்கம்பங்கள் அமைக்கவும், 1,584 மீட்டர் பழுதடைந்த 2 கோர் கேபிள்களை மாற்றி புதிய கேபிள்கள் அமைக்கவும், 188 எண்ணிக்கையில் பழுதடைந்த 4 கோர் பியூஸ் பாக்ஸ்களை

2022 ஏப்ரல் 18]

மாற்றி புதியதாக பியூஸ் பாக்ஸ்களை மின்கம்பத்தில் பொருத்தவும் மற்றும் 528 எண்ணிக்கையில் தெரு விளக்கு மின்கம்பங்களின் சேதமடைந்த முகட்டுசுவர்களைச் சீரமைக்கவும் மதிப்பீட்டிற்கான அனுமதி பெற்று பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர் அவர்கள்.*

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், இளைஞர்களின் எதிர்காலம், போற்றுதலுக்குரிய சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. உதயநிதி அவர்களையும் வணங்குகிறேன். எனது ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் பல ஆண்டுகாலமாக பராமரிப்பின்றி காணப்படுகின்ற சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 43, 38, 39, 40, 41, 42, 43, 47 ஆகிய வார்டுகளில் நிலவுகின்ற தெரு மின்விளக்குகள் குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்வண்ணம் அவற்றைச் சீரமைக்க விரைவிலே பணிகள் தொடங்கும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்களின் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 43–ல் அமைந்துள்ள இஸ்லாமிய சமுதாயத்தின் இடுகாட்டுப் பகுதியில் அச்சமூக மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள உயர்கோபுர மின் விளக்கினை அமைத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் ஆங்காங்கு உயர்மின் விளக்கு கோபுரங்கள் அமைப்பதற்குத் தடை வந்துள்ளது. கிராமங்களில் அதிகமான எண்ணிக்கையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அதுபோன்ற பணிகளைச் செய்கின்ற காரணத்தினால் மின்சாரச் செலவு அதிகமாக வருகின்றது என்கின்ற ஒரு நோக்கத்தோடு*

அதனை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், சென்னையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியிலுள்ள இஸ்லாமிய மக்கள் பயன்பெறும்வகையில் உயர்கோபுர மின்விளக்கு வசதியை நிச்சயமாகச் செய்துகொடுக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர் அவர்கள்.*

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.P. *கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் இருக்கின்ற அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கோவை மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட கிராமப்புறங்களிலும், ஒன்றியங்களிலும் புதிய மின் விளக்குகள் அமைப்பதற்குண்டான உத்தரவுகள் வராமல் இருக்கின்றன. அரசு அதற்குண்டான வழிமுறைகளை கூடிய விரைவில் கொடுத்தால், ஊராட்சிகளின் சார்பாகவும், ஒன்றியங்களின் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும் புதிய மின் விளக்குகள் அமைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் அதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கிராம ஊராட்சிகளைப் பற்றி பதில் சொல்வது, மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியகருப்பன் அவர்களுடைய துறையைச் சார்ந்தது. நகராட்சி சம்பந்தப்பட்டவைகளுக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற தெரு விளக்குகளைப் புதியதாக அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள்*

2022 ஏப்ரல் 18]

இல்லாமல் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், தெரு விளக்குகள் இல்லாத பகுதிகளுக்கு புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்குண்டான ஆணையை உடனடியாக எங்களுக்கு வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரம், கிராமம் ஆகிய இரண்டிலும் சேர்த்து தமிழ்நாட்டில் 15,69,587 தெரு விளக்குகள் இருக்கின்றன. அதில் மொத்தமாக 8,87,777* LED *விளக்குகள் இருக்கின்றன. பேரூராட்சிகளில் மட்டும் 84,923* LED *விளக்குகள் இருக்கின்றன. மாநகராட்சிகளில் 5,12,357 (*LED*) விளக்குகள் இருக்கின்றன. சென்னை மாநகராட்சியில் மட்டும் 2,90,497* LED *விளக்குகள் இருக்கின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, புதிய விளக்குகளை அமைக்கின்றபோது, மின்சாரத்தைச் சேமிக்கின்ற நோக்கத்தோடு அனைத்து இடங்களிலும் LED *விளக்குகளைத்தான் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் அப்படியிருக்குமானால், ஆய்வு செய்து செயல்படுத்த முடிவு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.P. *ஜெயசங்கரன் அவர்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், இந்த அவையில் உள்ள அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது சட்டமன்றத் தொகுதியில் கருமந்துறை பகுதியில், மேல்நாடு, கீழ்நாடு பஞ்சாயத்து, பைத்தூரில் வானாவரம், கல்லுக்கட்டு ஆகிய மலைக் கிராமங்களில் முக்கியமாக bus stand, *கோயில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்சாயத்துகள் எல்லாம் ஏற்கெனவே சொன்னதுமாதிரிதான். நம்முடைய மாண்புமிகு. . . (குறுக்கீடு) அதற்கு பதில் சொல்லிவிட்டார்கள்.

வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

114—

சிப்காட் தொழிற்பூங்கா

***7435—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல் செங்கத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், மேல் செங்கத்தில் தனியாக சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கான உத்தேசம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த 5 ஆண்டுக்காலமாக மேல் செங்கத்தில் இருக்கின்ற 12,000 ஏக்கர் இடத்தைப்பற்றி அரசிடம் பேசிக்கொண்டேயிருக்கிறேன். இதுவரையில் எந்தத் தீர்வும் காணப்படவில்லை. இப்போதும் அந்த வினாவை எழுப்பியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க உத்தேசம் எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு, அங்கே, தமிழக அரசின் நிலத்தை, ஒன்றிய அரசு வாடகைக்கு எடுத்து, அப்போது மத்திய, மாநிலப் பண்ணையாக செயல்பட்டது. இப்போது அந்த இடம் வனக்கோட்டத்தின் சார்பில் தற்காலிகப் பயன்பாட்டிற்காகப்